# பஞ்சவர்ண கிளி

(கவிதைகள்)



ப.சொக்கலிங்கம்

# பஞ்சவர்ண கிளி

(கவிதைகள்)



ப.சொக்கலிங்கம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **பஞ்சவர்ண கிளி** (கவிதைகள்) |
| ஆசிரியர் | : | **ப. சொக்கலிங்கம்**<br>62, விக்டோரியா கார்டன்ஸ்<br>20, ஜவஹர்லால் நேரு சாலை<br>கோயம்பேடு, சென்னை - 600 107.<br><br>99400 84290<br>chockalingam66@gmail.com |
| முதல் பதிப்பு | : | அக்டோபர் 2020 |
| அச்சிட்டு வெளியிடுபவர் | : | ப. சொக்கலிங்கம் |
| நூல் கிடைக்குமிடம் | : | ப. சொக்கலிங்கம்<br>62, விக்டோரியா கார்டன்ஸ்<br>20, ஜவஹர்லால் நேரு சாலை<br>கோயம்பேடு, சென்னை - 600 107. |
| வடிவமைப்பு | : | திரு. சி. பிரேம் ஆனந்த்<br>முத்து டிசைன்ஸ்<br>மதுரை - 625 001.<br>94420 84400 |
| அச்சாக்கம் | : | தி கிளாசிக் பிரிண்டர்ஸ், மதுரை -1. |
| விலை | : | ரூ.160/- |
| தாள் | : | 80 ஜிஎஸ்எம் |
| பக்கங்கள் | : | 112 பக்கங்கள் |

# சமர்ப்பணம்

எனக்கு எல்லாமுமாய் இருந்து
ஊக்கமும், ஆக்கமும் அளித்து
என் நல்வாழ்விற்கு வித்திட்ட
என் தந்தை
நினைவில் வாழும் **திரு.சொ.பழனியப்பன்** அவர்களுக்கு
அவர்களின் 85ம் பிறந்த நாளில்
இந் நூலை சமர்ப்பிக்கிறேன்

# நன்றியுரை

சிறு வயது முதல் தமிழ் மீது தீராக் காதல் கொண்டு, கவிதைகள் எழுதி வருகிறேன். அதற்கு மிக முக்கிய காரணம், ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டம் ஆழ்வார்குறிச்சியில், எனக்கு தமிழ் கற்றுக் கொடுத்த, ஸ்ரீ பரம கல்யாணி மேல்நிலை பள்ளி தமிழாசிரியர்கள். தமிழ் என்பது அமுதம், அள்ளிப் பருக, பருக குறையாது என்பதை உணர்த்தியவர்கள், என் தமிழாசிரியர்கள் திரு.சுவாமி, திரு.சூரியன், திரு.குற்றாலிங்கம். இவர்களுக்கு என் நன்றிகள் என்றைக்குமே உண்டு.

நான் நேரில் பார்த்து ரசித்த நிகழ்வுகள், கேட்ட செய்திகள், என் கற்பனை உதிர்த்த எழுத்துக்கள், இவை பலவற்றை **"பஞ்சவர்ண கிளி"** என்ற இந்த நூலில் கவிதைகளாக பாகம் 1 முதல் பாகம் 7 வரை தொகுத்துக் கொடுத்துள்ளேன். மேலும் என் சுவையான அனுபவங்களை பாகம் 8 ஆக "மற்றவை" என்ற தொகுப்பில் பகிர்ந்துள்ளேன். இது என் முதல் முயற்சி .

ஒவ்வொரு கவிதை எழுதி முடிக்கும் போதும் என் மனது அடையும் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. இந்த கவிதை எழுதும் பழக்கம் எனக்கு மிகப் பெரிய சோர்வு நீக்கியாக உள்ளது. இதை படிக்கும் உங்களுக்கும் உங்கள் சோர்வு நீக்கி சிரிக்கவும், சிந்திக்கவும் வைத்து புத்துணர்ச்சி அளிக்கும் என்று நம்புகிறேன்.

என்னுடைய அத்தனை கவிதைகளையும் பொறுமையாகப் படித்து, கருத்து கூறி, கவிதையின் சுவை கூட்ட வார்த்தைகளை தெரிவு செய்து கொடுத்து, புத்தகமாக பிரசுரிக்க ஊக்குவித்து முன்னுரை எழுதிக் கொடுத்த **முனைவர் கி.ரா.சிதம்பர குமாரசாமி,** முதல்வர் (ஓய்வு), அரசுக் கல்லூரி, சென்னை அவர்களுக்கு என் நன்றிகள்.

என் கவிதைகளுக்கு கருத்து கூறி, கேள்விகள் பல கேட்டு, கவிதைகளில் கருத்துப் பிழை, எழுத்துப் பிழை இவை தவிர்க்க உதவி, ஒரு ரசிகனின் அன்புரை எழுதி, அச்சிட்ட புத்தகமாக வெளி வர உதவிய **திரு. சூ.க.முரளி குமார்,** இயக்குனர், மாவெல் டெக்னாலஜிஸ், மதுரை அவர்களுக்கு என் நன்றிகள்.

என் கவிதைகளுக்கு கருத்து கூறி, ஊக்கப்படுத்தி, ஆசியுரை எழுதி ஆதரவளித்த என் அன்புத் தாயார் **திருமதி.ப.சாந்தா,** ஆழ்வார்குறிச்சி அவர்களுக்கு என் நன்றிகள்.

என் கவிதைகளை மெருகேற்ற, சந்தேகங்கள் பல கேட்டு, கவிதைகளை மேலும் தெளிவாக்க உதவி, அணிந்துரையும் எழுதிக் கொடுத்த **திரு.வை.வேலன்,** மூத்த துணைத் தலைவர் (ஓய்வு), கெமின் இண்டஸ்ட்ரீஸ், சென்னை அவர்களுக்கு மிக்க நன்றி.

ஆரம்ப காலம் முதல், என்னை கவிதை எழுத ஊக்கப்படுத்திக் கொண்டிருக்கும் **திரு.ஹரிஹரன்,** வங்கி அதிகாரி (ஓய்வு), செஸ் கோச், தாம்பரம் மற்றும் மருத்துவர் **Col.சுந்தரம் சுரேஷ் குமார்** VSM (ஓய்வு), எலும்பு முறிவு சிகிச்சை நிபுணர், ராணுவ மருத்துவமனை, புது டெல்லி ஆகியோருக்கு என் நன்றிகள்.

தொடர்ந்து என் கவிதைகளுக்கு கருத்து கூறி, உற்சாகப்படுத்திய என் சகோதரி **திருமதி ர.காந்திமதி,** சென்னை, என் மனைவி மருத்துவர் **சு.எழிலரசி,** குழந்தைகள் நல மருத்துவர்,

சென்னை, சகோதரி முனைவர் **சி.அனுபமா,** உதவி பேராசிரியை, சென்னை, அன்பு மகள்கள் குமாரி **சொ.திவ்யா,** சீனியர் டேட்டா அனலிஸ்ட், அமெரிக்கா, குமாரி **சொ.தீப்தி,** செஃப், மணிப்பால் ஆகியோருக்கு மிக்க நன்றிகள்.

இந்த புத்தகத்தை மிக குறுகிய காலத்தில் அழகாக வடிவமைத்துக் கொடுத்த சி. பிரேம் ஆனந்த் அவர்களுக்கும், அழகாக அச்சிட்டு கொடுத்த தி கிளாசிக் பிரிண்டர்ஸ்க்கும் என் நன்றிகள்.

**ப.சொக்கலிங்கம்**
சென்னை

# முன்னுரை



வியப்பு. இக்கவிதைகளைப் புரட்டும்போது எனக்கு ஏற்பட்ட உணர்ச்சி அதுவே. திரு.ப.சொக்கலிங்கத்தை ஒரு பொறியாளராக, தொழில் முனைவோராக நான் அறிவேன். அவருக்குள் ஓர் கவிஞர் இருக்கிறார் என்பது ஒரு இன்ப அதிர்ச்சி. எது நல்ல கவிதை என்ற ஆராய்ச்சி இன்னும் முற்றுப் பெறவில்லை. எது கவிதை இல்லை என்று சொல்வது எளிது.

“அதிகாரி சுட்டார் துப்பாக்கியை
அவர் மனைவி சுட்டார் சப்பாத்தியை”

இது கவிதை இல்லை என்பதில் இரு வேறு கருத்துக்கள் இருக்க முடியாது.

பசி ஆற எல்லோருக்கும் பிடிக்கும். ஆனால் பரிமாற ஒரு சிலருக்கே பிடிக்கும். தான் உள்வாங்கிய கருத்துக்களை சுதந்திரமான கவிதை மொழியில் புனைந்திருக்கிறார். உதாரணமாக **“வெற்றிலை”** பற்றி எழுதும் போது, **“தாம்பூலம் தொடங்கி - தாழ்வாரச் சுவர் வரை”** என்று சுருக்கமாக முடித்து விட்டார்.

அதுபோலவே சித்திரவதையை **“எள்ளின் கண்ணீர் - செக்கு எங்கும்”** என நறுக்கென்று கூறி விட்டார். சேக்ஸ்பியரின் ஹம்லெட் நாடகத்தைப் படித்த ஒருவர் ஓர் இலக்கியவாதியிடம் சென்று, “நான்தான் ஹம்லெட்” என்றாராம். அதற்கு மற்றவர் “நாம் எல்லோருமே ஹம்லெட்தான்” என்றாராம்.

லண்டன் வரை செல்வானேன்.

பாசமலர் படம் பார்த்து விட்டு திருநெல்வேலி பெண்டிர், “எங்க குடும்பக் கதையத்தான் படமா எடுத்திருக்காக” என்று அதிசயக்க, திருவல்லிக்கேணி மகளிரும் “ஆமா... இல்லை...” என்று எதிரொலித்தார்கள். பெரும்பாலான மனிதர்களின் வாழ்க்கையை அவர்களுக்கே படம் பிடித்துக் காட்டும் கவிதைகள் இந்த தொகுப்பில் ஏராளம். **“பணிவு”** என்ற தலைப்பில், புரோக்கர் கூறுவதாவது **“பெண் குனிந்த தலை நிமிராதவள், கையில் அலைபேசி இல்லாத போதும்”.**

மனிதர்கள் வாழ்ந்து அலுத்துப்போன உலகத்தை புதிதாகக் காட்டுவதே கவிதை.சற்று கனமான கருத்துக்களைக் கூட நகைச்சுவை உணர்வோடு அணுகியிருப்பது இவரது மென்மையான பார்வையை பறைசாற்றுகிறது. படித்த உடன் புரிய வேண்டும் என்ற நல்லெண்ணம் இவரின் தெளிவான நடையில் தெரிகிறது.

ஆங்கிலத்தில் பிரபலமான வாசகம் ஒன்றுண்டு. “எளிமையாக இருப்பது கடினம். கடினமாக இருப்பது எளிது” ( To be simple is difficult, To be difficult is simple ).

ப.சொக்கலிங்கத்தின் கவிதைகள் எளிமையாக இருந்தாலும், அவற்றுள் ஆழ்ந்த பொருள் பதிந்திருப்பதை அடுத்தடுத்து படிக்கும் போது உணரலாம்.

இனி இக்கவிதைகளை வாசிப்பின் ருசி அறிந்தோர் படிக்கலாம்.... மீண்டும்.... மீண்டும்

நல் வாழ்த்துக்களுடன்

முனைவர் **கி.ரா. சிதம்பர குமாரசாமி**
சென்னை

# ஆசியுரை



கவிதைகள் என்பது பல வடிவங்கள் கொண்டது. கவிதைகளை படைப்பதற்கு, தன்னைச் சுற்றி நடப்பவைகளை ஆழ்ந்து கவனிக்கும் திறன், ரசிக்கும் குணம், நகைச்சுவை உணர்வு, மற்றவர்கள் விரும்பிப் படிக்கும் வகையில் எழுதும் பாங்கு ஆகியன மிக முக்கிய தேவையான குணங்கள். இந்த நற்குணங்களை ஒருங்கே கொண்ட இந்த நூலின் ஆசிரியர் ப.சொக்கலிங்கம் எழுதிய **“பஞ்சவர்ண கிளி”** எனும் இந்நூல் நல்ல முறையில் வெளிவந்துள்ளது.

“வள்ளுவர்தனை உலகுக்குத் தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு” எனும் கூற்றுக்கேற்ப, **“திருவள்ளுவர்”** கவிதை அமைந்துள்ளது. வள்ளுவர் வாசுகியைத் தேடுவதாக முடித்திருக்கும் விதம் அருமை.

ஆசிரியர் **“எனக்குப் பிடித்தவை”** என்ற கவிதையில், தனக்குப் பிடித்ததாக வயலின் கருவி எழுப்பும் இன்னிசையையும், நெல் வயல் இருக்கும் திசையையும், வார்த்தை ஜாலங்களில் குறிப்பிடுவது சிறப்பாக உள்ளது.

**“மின் தடை”** என்ற கவிதையில், அமாவாசை நிலவை, மின் தடையோடு ஒப்பிட்டு, தந்தையிடம் மகள் வினவும் விதம் மிக நன்றாக உள்ளது.

**“ஊஞ்சல்”** என்ற கவிதையில், முன்னும் பின்னுமாக, நம் சிந்தனை ஓட்டங்கள் ஓடுவதை, ஊஞ்சல் ஆடுவதோடு ஒப்பிட்டு எழுதியது நம்மை சிந்திக்க வைக்கிறது.

பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை **“புத்தகப்பை”** என்ற கவிதை நன்கு பிரதிபலிக்கிறது.

“கேடில் விழுச்  செல்வம் கல்வியொருவற்கு
மாடல்ல மற்றயவை”

எனும் குறளுக்கேற்ப, பள்ளி செல்லும் மாணவச் செல்வங்கள், அழியா கல்வி பெற்று, பிற்காலத்தில், சாதனையாளர்களாகி வெற்றியடைய  வேண்டும் என்று அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு எழுதப்பட்ட **‘பள்ளி (வாசல்) கதவின் குரல்‘** என்ற கவிதை ஒவ்வொரு மாணவச்  செல்வமும் படிக்க வேண்டியது.

**“களத்து  மேடு”**
**கதிர்களுக்கு தண்டனை**
**நெல் மணிகளுக்கு விடுதலை**
**இந்த நீதி மன்றத்தில்...**

இந்த கவிதையில், விவசாயிகள் அடையும் மகிழ்ச்சியை மறைமுகமாய் வெளிப்படுத்தும் ஆசிரியருக்கு என் பாராட்டுக்கள்.

குழந்தையை மகிழ்விக்க, ஒரு தாய், தான் ஒரு குழந்தையாய் மாறி விளையாடுவதாக எழுதப்பட்ட **“பூங்கா”** என்ற கவிதை அருமை.

**“பஞ்சவர்ண கிளி”** கவிதை ஒரு வண்ணக் கலவை. **“ஆவாரம் பூ”**, என்ற  கவிதை ஆவாரம் பூ, இது ஒரு மலரல்ல, ஒரு மருந்து என்று உணர்த்தியது.

**“தென்காசி அல்வா”** படிக்கும்போது, நாமே சுவைத்து, அல்வா நம் நாவில் கரைந்து, தொண்டைக்குள் இறங்குவது போல பிரமை ஏற்படுகின்றது. மிக அருமை.

இந்த முதல் நூல் போல, மேலும் பல நல்ல நூல்களை ஆசிரியர் நமக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**ப.சாந்தா**
ஆழ்வார்குறிச்சி

# அணிந்துரை

பல திறமைகள் கொண்ட திரு.ப.சொக்கலிங்கம், தனது **“பஞ்சவர்ண கிளி”** என்ற கவிதை தொகுப்பிற்கு அணிந்துரை எழுதுமாறு என்னிடம் வினவ, எனக்கு ஏற்பட்ட ஐயம், இதற்கு எனக்கு என்ன தகுதி உள்ளதென்பதே. சுடச்சுட அவரது கவிதைகளை படித்த ரசிகன் என்ற ஒரே தகுதியின் அடிப்படையில் அவர் என்னை அணுகியிருக்கக் கூடும் என்ற முடிவுடன் இங்கு எழுதுகிறேன்.

திரு.ப.சொக்கலிங்கம் ஒரு பொறியாளர், MBA படித்து பொது மேலாளர் ஆக பணியாற்றியவர், நிழற்படம் எடுப்பதில் வல்லுநர், இசை மற்றும் உணவுப் பிரியர், நகைச்சுவை உணர்வு கொண்டவர், கண்ட காட்சிகளை கவிதையாய் வடிப்பவர். ஆனால் நிறை குடம் தழும்பாது என்பதிற்கிணங்க மிகவும் அமைதியானவர்.

**“பஞ்சவர்ண கிளி”** என்ற இந்த கவிதை தொகுப்பில் திரு.ப.சொக்கலிங்கத்தின் நகைச்சுவையுடன் கூடிய சமூக பார்வை, இயற்கையுடன் கூடிய காதல், விலக்க வேண்டிய மூட நம்பிக்கைகளை நயம் பட உரைத்தல், எள்ளி நகையாடுவது போல் இல்லறத்தை போற்றுதல், கொடிய நோய் **கொரோனா** பற்றிய தெளிவுரைகள் ஆகிய அனைத்தையும் காணலாம்.

இல்லாள் பொல்லாதவள் என்பது போல் பல கவிதைகளில் கூறிய ப. சொக்கலிங்கம், **“திருவள்ளுவர்”** என்ற தனது முதல் கவிதையில் **“வாசுகி எங்கே என்று தேடிக்கோண்டு”** என்ற வரிகளில் தனது உண்மை நிலைபாட்டினை அதாவது இல்லாளின் தேவையையும், மேன்மையையும் தெளிவு படுத்துகிறார்.

**தமிழ் ஆறாவது பூதம்** என்ற வரிகளில் தனது தாய்மொழிப் பற்றினை எடுத்துக் காட்டுகிறார். **“தேர்தல்”** என்ற கவிதையில் கொள்கைகளற்ற அரசியலை சாடுகிறார்.

**அதிருசன், அஞ்சுமாலி, ஆகாயத் தாமரை** போன்ற சொற்களில் அவரது தமிழ் கலைச்சொற்களின் ஆளுமை தெரிகிறது.

**ஆவாரம் பூ, செம்பருத்தி, மாண்புமிகு மரங்கள்** போன்ற கவிதைகள் முலம் அவரின் இயற்கை வைத்திய அறிவு குறித்து உணர முடிகிறது. **“இடுக்கண் வருங்கால் நகுக”** என்ற வரிகளில் அவரது நகைச்சுவை உணர்வு தெரிகிறது.

**பசியின் முன் சமூக இடைவெளி அதிகமாகி விடுகிறது** என்ற வரிகளில் ஏழ்மையின் தாக்கம் வெளிப்படுகிறது.

ப.சொக்கலிங்கத்தின் இந்த **“பஞ்சவர்ண கிளி”** நூல் படிப்பவர்களை பரவசமூட்டும், சிரிக்க வைக்கும், சிந்திக்க வைக்கும் , செயல்பட வைக்கும் என்று கூறி எனது அணிந்துரையை நிறைவு செய்கிறேன். நன்றி வணக்கம்.

**திரு.வை.வேலன்**
சென்னை

# ஒரு ரசிகனின் அன்புரை



பஞ்சவர்ண கிளி - தலைப்பே சொல்லும் படைப்பின் தனித்துவத்தை.

முன்னுரை எழுதுவதற்கு அத்துறையில் அனுபவப்பட்டவர்களாக பெயர் பெற்றவர்களாக இருக்கும் பலர் எழுத, நான் ஒரு சாதாரண ரசிகனாக, கவிதை ஆர்வலனாக அன்புரை கருத்துக்களாக வைக்கிறேன்.

நூலின் கட்டமைப்பிலேயே தன் வீச்சைக் காண்பித்திருக்கிறார் நூலாசிரியர் கவிஞர் திரு.ப.சொக்கலிங்கம். எத்தனை வகை கவிதைகள்... எத்தனை புதிய சிந்தனைகள்... எத்தனை புதிய பார்வை... எத்தனை மானிட பண்புகளின் அலசல்... எத்தனை சமூக நோக்கும் சிந்தனையும்... எவ்வித கட்டுப்பாடும் இல்லாமல் பன்முக தளங்களிலும் புகுந்து விளையாடி இருக்கிறார்.

அத்தனை கவிதைகளிலும் ஒரு தனித்துவ கருத்துச் செறிவு... அதனுடன் இழைந்த ஒரு உணர்வுச் சுவை. அந்த உணர்வுகள் நகைச்சுவையாக, மகிழ்ச்சியாக, சோகமாக, கோபமாக, ஆதங்கமாக, ஏக்கமாக, பல்சுவையாக பரிணமித்திருக்கிறது.

இது முதல் கவிதை நூல் என்கிறார். வெளி உலகிற்கு வேண்டுமானால் முதலாய் இருக்கலாம். ஆனால் ஆண்டாண்டுகளாய் தன் கருத்தில் உதித்தவற்றை பதித்து வைத்திருந்திருக்கிறாரே. மிக பெரிய செயல்.

கவிதையே தொழிலாகக் கொண்டோர் நூல் எழுதுவதும் புத்தகம் இடுவதும் வியப்பில்லை. அத்தகைய பெரும்பாலான கவிஞர்களிடம் சில நூலிழை மிகைப்படுத்தல் இருக்கும். தவறல்ல. ஆனால் சொக்கலிங்கம் தனது உணர்வுகளையே கவிதையாய் எவ்வித மேல் பூச்சும் இல்லாமல் அதனதன் இயல்போடு அலங்கரித்திருக்கிறார்.

வழக்கமாய் முன்னுரையில் சில கவிதைகளைச் சான்றாக எடுத்து கவிதையின் திறத்தை விளக்குவது வழக்கம். அவ்வழக்கத்தை இந்த அன்புரையில் நான் தவிர்த்திருக்கிறேன். இரண்டு காரணங்கள். ஒன்று எதை எடுப்பது எதை விடுவது என்ற போராட்டம். இன்னொன்று, அக்கவிதைகளை இங்கேயே கொடுத்து நீங்கள் ஆற அமர அனுபவித்துப் படித்து இன்புறும் சுவையைத் தடுக்க வேண்டாம் என்று.

அவ்வகையிலே, கவிஞர் தன் விசாலமான பார்வையை, பன்முக கருத்து வீச்சை, வசீகரிக்கும் சொல்லாடலை, ரசிக்க வைத்து, வாசிப்பவரை பல தளங்களுக்கு அழைத்துச் செல்கிறார். நாம் அனைவரும் வழக்கமாகப் பார்க்கும் விஷயங்களுக்கு இப்படியும் ஒரு கோணம் இருக்கிறது என்று ரசிக்க வைக்கிறார்.

உலகமே பெருமைப்படத்தக்க காலத்தை வென்ற உலக நீதி நூல் திருக்குறளைப் படைத்த திருவள்ளுவர்தான் பெரும் சிக்கனவாதி என்று நினைத்திருந்தேன். அவரது இனவழி வந்த நம் கவிஞர் அவர்வழி பற்றி சொல்லை சிக்கனமாய் பயன்படுத்தி இருக்கிறார். ஒவ்வொரு சொல்லையும் பொற்காசு போல மதிப்பறிந்து பயன்படுத்தியுள்ளார்.

இவற்றிற்கு நூலாசிரியரின் பன்முகத் திறனும் ஆளுமையும் ஒரு முக்கிய காரணம். ஒரு பொறியாளராக, தொழில் நுட்ப வல்லுனராக, மேலாண்மையாளராக, பயிற்சியாளராக, சமூக இயக்கங்களில் தலைமைப் பொறுப்பாளராக, ஒருங்கிணைப்பாளராக,

இன்னும் பல பொறுப்புள்ள பணிகளில் தன்னை ஈடு படுத்திக்கொண்ட அந்த அனுபவ முதிர்ச்சி அவரது கவிதைகளில் பரிணமிக்கிறது. நூற்றுக்கணக்கான கவிதைகள் பல்வேறு கருத்து தொகுப்புகளில் **சமூகம், இயற்கை, மாண்புமிகு மரங்கள், பயணம், காதல், கொரோனா, நகைச்சுவை** என்று விரிந்திருக்கிறது. அத்தகைய புதிய பார்வை தமிழுக்கு மேலும் வளம் சேர்க்கிறது.


நூலாசிரியர் கவிஞர் திரு.ப.சொக்கலிங்கத்தின் அத்துணை கவிதைகளையும் பதிப்பிட்டால் இன்னும் சில சுவைத்தற்கினிய நூல்கள் தேறும். அவை விரைவில் நிறைவேறும் என்ற ஆவலில் அவரது இம்முயற்சிக்கு எம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்முயற்சி கவிதையே தொழிலாக அல்லாத தமிழ் ஆர்வலர்களுக்கு தங்கள் படைப்புக்களை உலகுக்கு வெளிப்படுத்த ஒரு ஊக்கமாக, உந்து சக்தியாக அமையும் என்று நம்புகிறேன். அதுவே தமிழுக்கு நாம் செய்யும் மரியாதை.

அன்புடன்,

**சூ.க. முரளி குமார்**

மதுரை



# பாகங்கள்


1. சமூகம் (71)........................................17
2. இயற்கை (27)...................................39
3. மாண்புமிகு மரங்கள் (10)...............51
4. பயணம் (10).......................................59
5. காதல் (19)..........................................65
6. கொரோனா (13)...............................73
7. நகைச்சுவை (11)...............................81
8. மற்றவை (7)......................................87

# 1

# சமூகம்



## திருவள்ளுவர்

வள்ளுவம் படித்து
வெற்றி பெற்றோர்
வாழ்த்தி வணங்க
அருமை தெரியாதோர்
அங்கிங்குமாய் வேடிக்கை பார்க்க
நெடிந்துயர்ந்து நிற்கிறார்
வள்ளுவர்
இந்திய விளிம்பில்

வாசுகி
எங்கே என்று தேடிக் கொண்டு!

## வெற்றிலை

தாம்பூலம் துவங்கி
தாழ்வாரச் சுவர் வரை!

## சகுனம்

நம்மைப் பார்த்ததும்
சகுனம் சரியில்லை
என குறுக்கே ஓடிய பூனை!

## சித்ரவதை

எள்ளின் கண்ணீர்
செக்கு எங்கும்!

## உலக்கை

வலக்கைக்கும்
இடக்கைக்கும்
மாறி மாறி
அடைந்திடும்
நெல்லை அரிசியாக்கும்
இலக்கை!

## டால்மேஷன்

என்ன பாவம் செய்தது
இத்தனை கரும் புள்ளிகள்!

## களத்து மேடு

கதிர்களுக்கு தண்டனை
நெல் மணிகளுக்கு விடுதலை
இந்த நீதி மன்றத்தில்!

## டாஸ்மாக்

சமூக விலகல் தொடங்கி
சமூக விலக்கல் வரை!

## தமிழ்

இந்த ஆறாவது பூதத்தை
உணராதோர்
இயற்கையை
பஞ்சபூதங்களாய் முடித்து விட்டனர்!

## *எனக்குப் பிடித்தவை*

வயலின் இசை
வயலின் திசை!

## *ஒத்தையடிப் பாதை*

குழந்தை போட்ட
நேர்கோடு!

## *ஒப்பனை*

தேன் தடவிய
மருந்து!

## *குழப்பம்*

தீர்வு ஆடும்
கண்ணாமூச்சி ஆட்டம்!

## *தேர்தல்*

எண்ணிக்கை கணக்குகள்
பின்னுக்குத் தள்ளிவிடும்
கொள்கை பிணக்குகளை!

## *தேன்*

மலரை வென்று
மனிதனிடம் தோற்ற தேனீ !

## நம்பிக்கை

உறவுகளின் ஆணிவேரு
இது உடைந்தால்
உறவுகள் அக்குவேறு!

## கடிகாரம்

வயதைக் கூட்டுகிறது
குத்தாத முட்களால்!

## வானவில்

வானவில் தோன்றியது
அதிருசன் கனவில்!
(அதிருசன் - கண் பார்வை அற்றவர்)

## கட்டுமரம்

குறைந்த அடர்த்தி
காட்டு மரங்களை
ஆக்கி விட்டது
கட்டு மரங்களாய்!

## கர்லா கட்டைகள்

தாத்தா கையில் சுற்றிய
கர்லா கட்டைகளை
சுற்றி வரும் பேரன்மார்கள்!